Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி (1889) ஆனி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது — தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] யாழ்ப்பாணம்:- சார்வரி௵ ஐப்பசிமீ ககவ வெள்ளிக்கிழமை (4 November 1960) [இல-கக]

அரசியல் அலை

# மக்கள் சபையில் கைவீச்சுக் கெம்பியகாட்சி

## பேசிப் பயனில்லை என்று கைவீசுதல்கால இயற்கை

சட்ட நிரூபண சபை விவாதத்துக்கு மக்கள் ஏராளமாகப் போவார்கள்; அக்காலத்தில் அழகாக ஆண்மையுடன் பொருள்நயம் சொன்னயம் பொலியப் பேசும் ஆற்றல் படைத்தவர்கள் இருந்தார்கள். அரசாங்கசபையிலும் ஓரளவு சீர் இருந்தது. பாராளுமன்றம் வந்தது. யாராவது பேச்சுக் கேட்பவர்கள் இருக்கின்றார்களா?

பேச்சுப் பொலிவு இல்லாமல் இருந்தாலும் இக்காலத்திற் கைவீச்சுக் குறைவேயில்லை. ஆளை ஆட் பார்ப்பதோடு கோபந் தணிவதில்லை. கையை முட்டியாக மடக்கி ஆயுதமாக ஒருவருக்கொருவர் காட்டுவது மரபாய்விட்டது.

பள்ளிக்கூடங்களை எடுக்கும் திட்டத்துக்கு ஒரு தமிழ்ப் பிரதிநிதியாவது ஆதரவளிக்கவில்லை என்ற கவலை சிங்கள ஆட்சியாளருக்குக் கனவிலும் இல்லையாம் காரணம் சில அமைச்சர்கள் யாழ்ப்பாணத்தில் வந்து மக்களின் உள்ளக்கிடக்கையை நன்ருய் அறிந்துவிட்டார்களாம்.

—

### பள்ளிக்கூடப் பொருள்கள்

தலைமையாசிரியர்கள்மீது பொறுப்பு

=0=

அந்நாளில் சட்டம் பூரணமாய்விட்டால் அரசாங்கம் பாடசாலைகளை எடுக்கும் நாள் 1-12-60 ஆக மாற்றப்படலாம். அது அப்படியிருக்க 21-7-60 தொடக்கம் பள்ளிக்கூடங்களிலுள்ள கட்டடங்கள் பிறபொருட்கள் எல்லாவற்றுக்கும் தலைமையாசிரியர்களே பொறுப்பாளிகளாயிருக்க வேண்டியவர்களாவர். முகாமைக்காரரே பொறுப்பென நிரூபிக்கப்படாத விடத்தில் தலைமையாசிரியரே பொருள்களுக்குப் பொறுப்பானவரெனக் கட்டுப்படுத்தப்படுகின்ருர். வித்தியாதிகாரியின் பொறுப்பில் பள்ளிக்கூடங்ரள் விடப்பட்டபின் வித்தியாதிகாரியுடன் ஒத்துழையாத தலைமை ஆசிரியர்கள் தண்டிக்கப்படலாம். பதவியிலிருந்து நீக்கப்படுதலுமாகும். கல்வியமைச்சின் கருத்தாய் மேற்கண்டவை. வெளிவந்துள்ளன.

—

### பேராசிரியர் துரைசுவாமி சாஸ்திரிகளின் பகிரங்கப்பேருரைகள்

ஆங்கில தமிழ்ப் பேருரைகள் நிகழ்த்துதலிற் பெரும் பேர்படைத்த பேராசிரியர் எஸ் ஆர். துரைசுவாமி சாஸ்திரிகள் (இந்தியா) 10-11-60 தொடக்கம் 14-11-60 வரையும் யாழ்ப்பாணத்தில், இந்து கரும ஆலோசனைச்சபை ஆதரவில் தொடர்ச்சியாகப் பேருரைகள் நிகழ்த்துவார்கள். அரசாங்க அதிபர் திரு ம ஸ்ரீகாந்தா அவர்களுடன் தங்குவார்கள்.

"இராமாயணம்" என்னும் பொருளில் 11, 12, 13-11-60ல் வண்ணை வைத்தீசுவர வித்தியாலயத்திற் பேருரைகள் ஆற்றுவார்கள். 10-11 60லும் 14-11-60லும் பிற இடங்களிற் பேசுவார்கள்.

இந்த சமயக்கரும ஆலோசனைச் சபையின்சார்பில் பிரசங்க ஒழுங்குகள் வைத்தீசுவர வித்தியாலயத் தலைமை ஆசிரியர் திரு. ச. அம்பிகைபாகனவர்கள் பொறுப்பில் விடப்பட்டிருக்கின்றன. சாஸ்திரி அவர்கள் யாழ்ப்பாணத்திற் செய்யும் பிரசங்கங்களின் விபரங்கள் திரு. அம்பிகைபாகனவர்களிடமிருந்து அறியலாம்.

—

### நற் சிந்தனை

கல்லார்க்குங் கற்றவர்க்குங்
களிப்பருளுந் தெய்வம்
காணாத காட்சியெல்லாங்
காட்டுகின்ற தெய்வம்
நில்லாத நீர்சடைமேல்
நிற்கவைத்த தெய்வம்
நெற்றியின்மேல் ஒற்றைக்கண்
நேரவைத்த தெய்வம்
எல்லார்க்குந் தெய்வ
மென்னுடைய தெய்வம்
இதையறிந்து வாழுவார்
எல்லாருந் தெய்வம்
செல்லாரு மிலங்கையில்
வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள
தெய்வமிது தானே.

(சிவ தொண்டன்)

### இலங்கை வானொலியில்

மகாவித்துவான் கணேசையர் நினைவு

—:—

நாவலர் சிஷ்ய பரம்பரையில் வந்த மகாவித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையரின் இரண்டாவது சிரார்த்ததினம் இவ்வருடம் 8-11-60 செவ்வாய்க்கிழமை வருகின்றது. இப்பெரியாரை நினைவுகூரும் முகமாக இலங்கை வானொலி ஓர் உரைச் சித்திரத்தை அன்றிரவு 7-15 மணிமுதல் 7-45 மணி வரை ஒலிபரப்ப ஏற்பாடு செய்துள்ளது. வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில், சென்ற மாதத்தில் நடந்த கணேசையர் நினைவுமலர் வெளியீட்டு விழாவில் நிகழ்த்திய உரைகளின் சிலபகுதிகள் இந்நிகழ்ச்சியில் இடம்பெறுமென அறிகின்ருேம்.

—

## திருக்கேதீச்சர நிலைமை

### திருந்த தமிழர் நிலைமை திருந்தும்

### கும்பாபிடேகச் சொற்பொழிவில் சேர். கந்தையா வைத்தியநாதன்

திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரண சபையாரால் ஆரம்பிக்கப்பட்ட திருப்பணி வேலைகளுள் தற்பொழுது பூர்த்தியடைந்த பரிவார ஆலயங்களில் 31-10-60 திங்கட்கிழமையன்று விநாயகர் சுப்பிரமணியர் நடராசர் ஆகிய மூர்த்திகளை அந்தந்த ஆலயங்களில் முறையாகப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது. புதைபொருளாகப் பெற்ற புராதன மகாலிங்கத்தையும் பொருத்தமான ஆவுடையார் அமைத்து மேற்குப்பரிவாரத்தின் மத்தியில் மகாலிங்க மண்டபத்தில் பிரதிஷ்டை செய்து அதற்கும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், சிவஸ்ரீ. இ. நித்தியானந்தக்குருக்கள், சிவஸ்ரீ. சிவசாமிக்குருக்கள், சிவஸ்ரீ. இந்திரக்குருக்கள் முதலியோர் சைவாசாரியர்களாக அமைந்து கிரியைகளை 29-10-60 சனிக்கிழமை தொடக்கம் ஆகம முறைப்படி செய்தார்கள்,

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்களால் 1910-ம் ஆண்டு பாடப்பட்ட திருக்கேதீச்சரப் பதிகம் கோயிற் சன்னிதானத்தில் பல சைவ அடியார்கள் கூடிய சபையில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் படித்து அரங்கேற்றப்பட்டது. இந்நூலை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் குறித்த கும்பாபிஷேக தினத்தின் மகத்துவத்தைத் தெரிவிக்கும் நோக்கமாக அச்சிட்டு வழங்கினுர்கள்,

ஞாயிற்றுக்கிழமை இரவுக் கிரியைகள் முடிந்த பின்பு பிரார்த்தனைக்கூட்டம் மேற்குப் பரிவாரத்திலுள்ள மகாலிங்க மண்டபத்தில் நடைபெற்றது. ஷை கூட்டத்துக்குத் தலைமைவகித்த சேர். கந்தையா வைத்தியநாதன் திருக்கேதீச்சர ஆலயத்தின் பூர்வீகத்தைப்பற்றி விரிவாக எடுத்துக்காட்டி ஒரு சொற்பொழிவாற்றினுர். திருக்கேதீச்சரம் உன்னத நிலையிலிருந்தபொழுது தமிழர் நிலை சிறப்பாக இருந்ததெனவும் எதிர்காலத்திலும் திருக்கேதீச்சரம் உன்னத நிலையையடையும்பொழுது தமிழர் நிலையும்

தொடர்ச்சி 6ம் பக்கம்)

## மகாஜனக்கல்லூரியில் நடராசர் பிரதிஷ்டை

—:0:—

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் சைவச் சூழலில் வாழவேண்டுமென்னும் வேணவாக்கொண்டு கல்லூரி அதிகாரிகள் ஒரு ஆலயம் அமைத்துள்ளனர். அவ்வாலயத்தில் சிவகாமியம்பாள் சமேத ஆனந்த நடராசர் பிரதிஷ்டை செய்யப்பட்டார். இக்கல்லூரியின் ஐம்பது ஆண்டுப் பூர்த்தி விழாவின் அண்மையில் இப்பிரதிஷ்டை நடைபெற்றது. இத்துடன் இக் கல்லூரித் தாபகரின் நோக்கமும் பூரணமடைந்தது.

மாவிட்டபுரம் [illegible] சு. துரைசாமிக் குருக்களின் மேற்பார்வையில், கீரிமலை பிரம்மஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் பிரதிஷ்டா குருவாகவும், மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள், பிரம்மஸ்ரீ ஐ. வைத்தியநாதக்குருக்கள் சாதகாச்சாரியர்களாகவும் திறம்படக் கடமையாற்றிக் கும்பாபிஷேகத்தைச் செய்தனர்.

இவ்விழாவிற்கு மாகாண அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களும், வட மாகாணக் கல்வியதிகாரி திரு. சி. உ.. [illegible] அவர்களும் சமுகமளித்திருந்தனர்.

—

## செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு தங்கமயில் வாகனம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான 27 சிவாலயங்களில் ஒன்ருகவுள்ள புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீஸ்வரன் கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்திலுள்ள ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமிக்குக் கந்தசஷ்டிவிழா சிறந்தமுறையில் நடைபெற்றது. விழா நாட்களில் "கந்தர் கலிவெண்பா", "கந்தர் அலங்காரம்", "கந்தர் அநுபூதி", "திருமுருகாற்றுப் படை", "திருப்புகழ்", "கந்த புராணம்" இவைகளைப் பற்றிப் பேராசிரியர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

ஆதீனத்தின் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைசுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் பெரும் பொருட் செலவில் "தங்கமயில்வாகனம்" செய்து வைத்துள்ளார்கள். அந்த வாகனத்தில் 25-10-60 அன்றுமாலை ஸ்ரீசெல்வ முத்துக்குமாரசுவாமி எழுந்தருளி சூரசம்காரக் காட்சியை அளித்துள்ளார்,

ஸ்ரீசெல்வ முத்துக்குமாரசுவாமிக்கு ஆஸ்திக மக்களின் பொருளுதவியால் ஒரு இலட்சத்து அறுபதாயிர ரூபா செலவில் "நவரத்தின அங்கி" தயாரிக்கப்பட்டு வருகின்றது.

(திரு. மா.பா, தினமணியிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சார்வரி ஸூ ஐப்பசி மீ
கசஉ வெள்ளிக்கிழமை


# இனி என்ன?

நூற்றொருவர் பாராளு மன்றத்து அங்கத்தவர்கள் ஆற்றிய செயலின் பயனாக இலங்கை வாழ்இனங்களில் ஓரினமாகிய தமிழ் மக்கள் ஆற்றொணு அல்லலில் வீழ்த்தப்பட்டிருக்கின்றனர். ஆனால் அல்லல் என்செயும் அருவினை என்செயும் என்ற பண்பு பொருந்திய தமிழ் மக்கள் இறைவனை வழுத்தி இன்னல்களைப் போக்க இடைவிடாது முயல்வார்கள் என்பது திண்ணம்.

பாராளு மன்றத்தில் நடந்த பள்ளிக்கூடங்கள் எடுக்கும் திட்டத்தைப்பற்றிய விவாதத்தின்பொழுது வாக்குகள் அளிக்கப்பெற்ற வகையை ஆராய்ந்து நோக்கின் இந்நாட்டின் ஆட்சியாளர்கள் பொதுவுடைமைக் கொள்கையை முற்றிலும் ஆதரிப்பவர்களாய்க் காணப்படுவதுமன்றி அதன் விளைவாக இறைவழிபாட்டை இல்லாமற் செய்வதற்கு வழி தேடுகின்றவர்களாயும் காணப்படுகின்றார்கள்.

பள்ளிக்கூடங்களை எடுக்கும் திட்டத்தின் முதலாம் பகுதியே இப்பொழுது மக்கள் சபையின் ஆதரவைப் பெற்றது அடிப்படை உரிமைகளை அடியோடு கவரும் நடைமுறைகள் அடங்கிய திட்டத்தின் இரண்டாம் பகுதி வெளிவரமுன் முதலாவது திட்டப்படி மாற்றங்களைச் செய்வது சனநாயக முறையாகாது என்பதைக் கல்வி அமைச்சர் மறந்துவிட்டார். இது ஆட்சியாளர்களின் உள்ளக்கிடக்கையையும் தமிழ்மொழிக்கும் தமிழ் இனத்துக்கும் மாறான நோக்கத்தையும் தெற்றெனக்காட்டுகின்றது.

மதங்களும் மதபோதனைகளுமே இந்நாட்டின் சால்பாக விளங்கிய காலம் கழிந்து போகின்றது. பொதுவுடைமைஎன்கின்ற போர்வையில் மறைந்து பழமைக்கும் பண்புக்கும் பாதகமான கொள்கை புகுத்தப் படுகின்றமையால் இறைநெறி தழுவி ஊட்டப்பெற்ற கல்விமுறை கைவிடப்பெறுகின்றது. ஆட்சியாளர்களின் ஆணவமே இவ்வளவு அறியாமையை உண்டாக்கிவிட்டது! கல்வி ஞான ஒளி வீசிய உலகில் அல்லல் அறியாமை இருள் மூடுவது யார்செய்த தீவினையின் பயனோ யாமறியேம்!

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. தமிழ் மக்கள் சார்பாகப் பாராளுமன்றம் சென்றவர்கள் பேராபத்தை விளைவிக்கும் இந்தத் திட்டத்திற்கு ஆதரவளிக்காது நின்றவகையில் இத்திட்டம் நாட்டின் மக்கள் அனைவரின் அங்கீகாரத்தைப் பெற்றதாகக் கணிக்கப்படமாட்டாது. எனவே தமிழ்மக்கள் தொடர்ந்து பணிபுரிவார்களாக. மொழியும் மதமும் இல்லையேல் இனமே இல்லை. இனம் இன்றெனில் தமிழ் மக்கள் உணர்ச்சியற்ற உயிரற்ற சடலங்களாகவே பயனற்றவர்களாவார்கள்.

# "கந்தன்" என்பதுபற்றிய கருத்து விந்தையானது

## ஆசங்கிக்கப்பட்டது அலெக்சாந்தர்பற்றியகூற்று

(முற்றொடர் -7)

இப்படியாக, வேதங்களையும் வேள்விகளையும் அந்தணர்களையும் உச்சிமேற்கொண்டு போற்றி, வழிபட்டு வாழ்ந்திருக்கிறார்கள் பண்டைத் தமிழ் மன்னரும் மக்களும். இவைகள் பகைவர்களாகிய 'ஆரிய' ரின் ஒழுக்க முறைகள் என்றால் வீரத்தமிழ்மக்கள் இவற்றை ஏற்றிருப்பார்களா? அக்காலத்திலிருந்த தமிழ்மன்னரும் மக்களும் பேடிகளா? இவற்றை உண்டிருந்து வாழ்வதற்காக உரைத்தவர்களா? பேராசிரியர் அவர்களின் கருத்து எதுவோ?

இருக்க, முருகப்பெருமான் தேவரும், முனிவரும் அந்தணர்களும்,பதினெண் கணங்களும், எண் வகை வசுக்களும், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் முதலியதலங்களில் வணங்கி வழிபட அவ்வழிபாட்டை

திரு. மு. வைத்தியலிங்கம்

ஏற்று, உவந்து அருள்புரிவதுமன்றி, குறவர் வெறியயர் களத்தும், குறமகளிர் குரவைக் கூத்தாடு மிடத்தும் எழுந்தருளி அவர் மகிழக் கலந்து விளையாடுவதும் உரியன்.

'கொடுந்தொழில் வல்லிற் கொலைஇய கானவர்' குரவைக் கூத்தாட, மயில் போன்ற சாயலையுடைய மடப்பம் பொருந்திய ஒழுக்கத்தையுடைய குறப்பெண்களைத் தாங்கித் தழுவி, முதற்கை கொடுத்து மலைகள்தோறும் சென்று விளையாடுதலும்உடையன்', என ஐந்தாம் பாட்டுப் பேசுகிறது.

குறமகளிர் முருகனை வழிபடுந் திறம் கடைசியான பழமுதிர் சோலையில்பேசப் பட்டிருக்கிறது. அவர்கள் வழிபாட்டுக்கென ஓர்இடங் கண்டு, அதனைத் தூய்மை செய்து, நெய்யுடனே சிறு வெண் கடுகையும் அப்பி, மந்திரத்தைத் தோன்றாமல் உச்சரித்துக் கைகூப்பி நின்று, அழகிய மலர்களைத் தூவி, மாறுகொண்ட நிறத்தினையுடைய இரு உடைகளை உடுத்து, காப்புக் கட்டி, பொரிதூவி, ஆட்டுக்கிடாயினது உதிரத்தோடே பிசைந்த வெள்ளரிசியைச் சிறு பலியாக இட்டு, பல பிரப்புக்களையும் வைத்து, சிறிய பசு மஞ்சளோடே நறிய சந்தனம் முதலியவற்றையும் தெளித்து, மாலைகள் தூக்கி, மலைப்பக்கத்தில் அமைந்த தம் ஊர்கள் 'பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி', நறிய தூபங் கொடுத்து, குறிஞ்சி நிலத்துக்குரிய பண்ணைப்பாடி, வாத்தியங்கள் ஒலிக்க, (குறப்பெண்டீர்) தெய்வமின்றேன்பார் அஞ்சும்படியாக முருகக் கடவுளை வழிப்படுத்துவர். இவ்விடத்தே வேலன் வெறியாடுவதையும் செய்வன்.

பொதுவாக நோக்கில் திருமுருகாற்றுப்படை தமிழ்கூறும் நல்லுலகில் வாழ்ந்த - வாழ்கின்ற - வாழும் பலதரப்பட்ட மக்கள், முழுமுதற் பொருளாகிய முருகப் பெருமானை வணங்கி அருள் பெறும் முறையைத் தெளிவாக உணர்த்துகிறது. இறைவன் அறிவுக்கு அளவாகிய அற்புதமுடையவன்.

இனி, பேராசிரியர் அவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரையின் அடுத்த பகுதியை நோக்குவாம். இது முருகக் கடவுளின் ஒரு பெயராகிய கந்தசுவாமியார் என்னும் சொல்லைப் பற்றியது. பேராசிரியர் கூறுவதாவது:- "கந்தன் என்னும் பெயர் வடமொழியிலுள்ள 'ஸ்கந்த' என்னும் பெயரினின்று வந்ததென்பர். ஆனல் ஒரு சிலர் கந்தன் என்பது அவ்வாறு வரவில்லை; இந்தியாவிற்குள் கி. மு. 4ம் நூற்றாண்டில் படையெடுத்து வந்த அலெக்சாந்தர் என்னும் கிரேக்கஅரசனின்பெயரே பிற் காலத்தில் திரிக்கப்பட்டுக் கந்தனென மாறியதென்பர். அலெக்ஸாந்தர் இந்தியாவிற்கு வந்த வழியிலுள்ள கந்தகார் முதலிய பல இடப்பெயர்கள் அவன் பெயரின் தொடர்போடு இன்னும்வழங்குகின்றன".

பேராசிரியர் அவர்களை நாம் வெகு விநயத்துடன் கேட்டுக்கொள்வது ஒன்றுண்டு. அவர் இப்பந்தியில் குறித்த 'ஒரு சிலருள்' ஒருவர் இருவர் பெயர்களையும், தகுதியையும் அவர்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

பள்ளிக்கூடங்களை ...........

5-ம் பக்கத் தொடர்ச்சி

மல்ல. ஈழநாட்டில் தமிழ் பேசும் சைவ, இஸ்லாமிய, கிறீஸ்தவ, புத்தசமய மக்கள் அபிமானிகள் திண்ணைப் பள்ளிக்கூடங்களைத் தொடங்குவார்கள் போலும்?
தமிழும் சைவமும் வாழ்க.

சைவத் தமிழ் அபிமானி,
சுழிபுரம்.

நேயர்கள் நெஞ்சம்

# பொது சேவைக்குப் போட்டி ஏன்?

ஐயா,

இந்த வாரத்திலும் அடுத்தடுத்த வாரங்களிலும், இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள, நகர சபைகள், பட்டினசபைகள், கிராமச்சங்கங்களின் புதுத் தொண்டர்கள் தெரிவுக்கான வேலைகள் துரிதமாகநடைபெறுகின்றன அந்தந்தத் தொகுதிகளுக்கான அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் ஏற்கும் தேதிகளும் குறிப்பிடப்பட்டாயிற்று கிழக்கு மாகாணத்திலே மட்டக்களப்புப் பகுதியிலேயுள்ள 22 கிராமச் சங்கங்களின் தேர்தல்கள் சமீபத்தில் நடைபெற விருக்கின்றன. அந்த இருபத்திரண்டு கிராமச் சங்கங்களிலும் ஏறக்குறைய 50 அங்கத்தவர்கள் போட்டியின்றி ஏக சம்மதமாகத் தெரியப்பட்டு விட்டார்கள். இச்செய்திகள் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. இது இப்படியிருக்க வடபகுதியின் நிலைமையை நோக்கும்போது அழுவதா சிரிப்பதா என்று எமக்குத் தெரியவில்லை. இந்நாட்டில் பொதுச் சேவைக்கு இவ்வளவு போட்டியிருக்கிறது பொதுமக்கள் இன்னும் தூங்குகின்றார்கள். வாக்காளர்கள் எண்ணினால்—ஒரு சிறு முயற்சி எடுத்தால் — வடபகுதியிலும் இந்தச் சிறுதேர்தல்களுக்கு அங்கத்தவர்களைப் போட்டியின்றி அனுப்பிவிட முடியாதா? அபேட்சகர்களின் வீண் போட்டிகளுக்குப் பொதுமக்கள்தானே ஆதரவு கொடுக்கின்றார்கள். [illegible] யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலில் ஒவ்வொரு வட்டாரத்திலும் மூவர் நால்வர் போட்டியிடுவார்கள்போலத் தெரிகிறது, ஏன் இந்தப் போட்டி? யாழ் நகர் வாக்காளர்களே! இம்முறை நிகழவிருக்கும் மாநகர சபைத் தேர்தல் மிக முக்கியமானது என்பதில் ஐயமில்லை.

வாக்காளர்களாகிய நாம் மிக மிக எச்சரிக்கையாக இருந்து, இந்தச் சமூகப்பணியைத் தெய்வப் பணியாகக் கருதி, நியாயத்துக்கும் நீதிக்கும் மதிப்புக் கொடுத்துக் கண்ணியமாக நடக்கவேண்டும். பெருமக்களே! எங்கள் தீர்ப்புக்கு வரவிருப்பவர்கள் யார்? எத்தகையவர்கள்? தலைவர்களா? அல்லது எம்மைப்போன்ற பொது மக்களா? அவர்கள் குணசீலமுள்ளவர்களா? பொது மக்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர்களா? பொது மக்கள் கேள்வியை மதிப்பவர்களா? விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை யுடையவர்களா? தன்கருமம் பார்ப்பவர்களா? என்ற இன்னோரன்ன பலவிடயங்களைக் கவனிக்க வேண்டும். வாக்காளர்களே! நாம் நமது கடமையைச் சரியாகச் செய்யாமல் விட்டுவிட்டு, அரசாங்கம் நீதி செய்யவில்லையென்று கூறுவது பிழையல்லவா? நாம் உடனடியாக முயற்சி எடுத்து ஒருசில வட்டாரங்களிலாவது அங்கத்தவர்களைப் போட்டியில்லாமல் அனுப்ப முயற்சி எடுக்க வேண்டும். எந்த மாபெருந்தலைவர் என்றாலும் பொதுமக்கள் எண்ணத்துக்கு இசைய வேண்டும். பொது மக்களால் தெரியப்படுபவர், பின்னர் பொதுமக்களால் நிறுத்தப்படக் கூடியவராக இருக்க வேண்டும், இத்தகையவர்கள் நாட்டில் இல்லாமலில்லை, இருக்கிறார்கள்—பல பெருமக்களிருக்கிறார்கள். எனவே, இந்தத் தேர்தல்களில், பொதுமக்கள் சிரத்தையெடுத்து, நல்ல கண்ணியமானவர்களை, கட்டுப்பாடுள்ளவர்களை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுள்ளவர்களை, வட்டாரத்தின் பெருமையையும், தமிழினத்தின் தகைமையையும் பேணக்கூடியவர்களைத் தெரிந்தெடுத்து நாமும், நாடும் வாழ வழிவகுக்க வேண்டும். இது யார் கையிலுள்ள கடமை?

நமக்கு எதிர்காலத்தில் நகரசபையிலே நல்லன நடக்க வேண்டுமானல் நாமும் நமது கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். நமதுகடமையைச் சரிவரச் செய்ய, அபேட்சகர்களுக்குரிய இலட்சணங்களை நன்கு அறிய வேண்டும். 'அஞ்சாமை, அறிவுடைமை, பொறுமை, தன்னலங்கருதாமை, ஒற்றுமை என்பவற்றைப் பேணக்கூடியவர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும், சிந்தியுங்கள்! சிந்தித்து ஒரு முடிவுக்கு வாருங்கள். செயலாற்றுங்கள். 'நன்றும் தீதும் பிறர் தர வாரா'.

"காவன்னு - ஈனு"
7-ம் வட்டாரம்
நாயன்மார்கட்டு

> "மனத்தோடு வாய்மை
> மொழியிற் றவத்தோடு
> தானஞ் செய்வாரிற் றலை"

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கதிர்காமத்திலுள்ள சைவ மடங்கள்

## சைவப் பெரியோருக்கும் சங்கங்களுக்கும் ஒரு வேண்டுகோள்

கதிர்காமத்தைச் சட்டமூலம் புனித நகரமாகப் பிரகடனம் செய்யும் திட்டத்திற்கிணங்க, இத்தலத்தில் அமைந்துள்ள இந்து மடாலயங்களை அப்புறப்படுத்த வேண்டும் என்னும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு கொழும்பு இந்துவாலிபர் சங்கம் கண்டனம் தெரிவித்துச் சமீபத்தில் கலாசார மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளது. இத்தீர்மானத்தைக் கையாண்டு இலங்கை வாழ் இந்துக்களின் மனங்களைப் புண்படுத்த வேண்டாமெனச் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

தேசியத்திட்டக்குழு (கமிசன்) இவ்வபிப்பிராயத்தைச் சென்ற வருடம் தெரிவித்ததைத் தொடர்ந்து நாடெங்குமுள்ள இந்துமத ஸ்தாபனங்களும் பெரியார்களும் எதிர்ப்புக்குரல் எழுப்பியதையும், அதையொட்டி இந்துவாலிபர் சங்கம் நாடெங்கும் பல சமூகத்தினரிடமிருந்தும் திரட்டப்பட்ட 8000த்திற்கு அதிகமான கைச்சாத்துக்களைக் கொண்ட வேண்டுகோளொன்றை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்ததையும் கலாசார மந்திரிக்குச் சுட்டிக் காட்டியுள்ளது.

இம்மடங்கள் இருப்பதால் தலததின் புனிதத்தன்மை எவ்வகையிலும் குறைந்துவிடாதென்றும், இவை யாத்திரீகர்கள் தங்கும் விடுதிகள் மட்டுமல்லாது, வணக்கத்திற்குரிய பூசையறைகளைக் கொண்டவைகளாகவுமுள்ளன என்பதும் இவ்வேண்டுகோளில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது.

மேற்படி வேண்டுகோளுக்குப் பதிலளித்த கலாசார மந்திரியின் நிரந்தரக்காரியதரிசி, தேசிய திட்டக்குழுவின் (கமிசனின்) ஆலோசனைகள் அரசாங்க அங்கீகாரம் பெற்ற இரண்டு மாதங்களில் இதற்கு மறுப்புகள் தெரிவிக்கவேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார். தற்போது இது மந்திரியின் அங்கீகாரம் பெற்றுவிட்டபடியால் உடனடியாக நாடெங்குமுள்ள சைவப் பெரியார்களும், சமயச் சங்கங்களும் தீர்மானங்கள் மூலமாகவும், தந்திகள்மூலமாகவும் தங்கள் எதிர்ப்புக்களை உடனடியாக அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டுமெனக் கொழும்பு இந்துவாலிபர் சங்கம் கேட்டுக்கொள்கின்றது,

—

### சம்பளம் பெற மறுத்த தமிழ் உத்தியோகத்தர்

—:—

சம்பள இடாப்பில் எல்லாம் சிங்களமாயிருந்தமையால் இருகம அரசாங்க வைத்தியசாலையைச் சேர்ந்த ஏழு தமிழ் உத்தியோகத்தர் அதிற் கைச்சாத்திட்டுத் தங்கள் சம்பளத்தைப் பெற மறுத்துவிட்டனர். சிக்கலை நீக்குதற்கு சிங்களத்துடன் தமிழ் உத்தியோகத்தர் விபரங்களை ஆங்கிலத்திலும் பதியும்படி சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளாரென இத்தொடர்பில் அறியவருகின்றது.

—

### புதைந்து கிடந்த சிவ விக்கிரகங்கள்

பொலநறுவையில் எடுக்கப்பட்டுள்ளன

சிவன், பார்வதி, திரிமூர்த்தி விக்கிரகங்கள் பொலநறுவை 'கைபென' விகாரைக்கு அண்மையிலுள்ள சிவன் கோயிலின் பின்புறத்தில்19-10-60 புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியினராற் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவை மக்கள் பார்வைக்கு அங்கே வைக்கப்பெற்று அநுராதபுரம் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதி நூதனசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

—

## கொழும்புத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழா

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் பதினெட்டாவதுஆண்டு விழா 28, 29-10-60 ஆம் நாள்களில் மாலை 5 மணி தொடக்கம் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

முதல்நாள் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்களும இரண்டாம்நாள் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களும் தலைமை வகித்தார்கள். தமிழ்நாட்டிலிருந்து அழைக்கப்பட்ட திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டமான் அவர்கள் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றினர்கள். அவர் பேசும்போது,

"தமிழ்நாட்டிலே கவிச்சக்கரவர்த்தி கம்பனைவிடச் சிறந்த கவி யாருமில்லை. ஆனால் இராமகாதையை ஏன் பாடினன் கம்பன் என்று பலர் கேட்கின்றனர், இராமகாதைமூலம் கம்பன் சைவத்திறனை உலகினிற்கு எடுத்தியம்பினன். கம்பராமாயணம் சைவத்திற்குப் புறம்பானதல்ல".

கவிச்சக்கரவர்த்தி கம்பன் மக்கள் குலம் உய்வதற்காகப் பல உயர்ந்த கருத்துக்களைத் தனது காவியத்தில் எடுத்தியம்பினர். வள்ளுவரின் அரிய கருத்துக்களை உள்ளடக்கி அவற்றுக்கேற்ப அற்புதமான கற்பனை மெருகு பூசித் தீந்தமிழ்க்காவியமாக இராமாயணத்தை வடித்தார் என்று கூறினர்.

—

### பாராட்டுவிழா

உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில், மூப்பது ஆண்டுகள் தொடர்ந்து உதவி ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. மு. விசுவலிங்கம் அவர்களுக்கும், மூன்ருண்டுகள் பதிலாசிரியராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்ற செல்வி சு. ஈஸ்வரிக்கும் 31-10-60 திங்கள் மாலை ஒரு பாராட்டுவிழா நடைபெற்றது.

பாராட்டுரைகளுடன் சிற்றுண்டி வழங்கல், நிழற்படமெடுத்தல், பாராட்டுப் பத்திரம் வாசித்தளித்தல், அன்பளிப்பு நல்கல்முதலிய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

—

நேயர்கள் நெஞ்சம்

## தமிழினத்துக்கு வரும் தீமையைத் தவிர்க்க ஒரு வழி

இந்து நிலையங்களும் இந்துசமுகமும் அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதை எதிர்த்துக் கருத்துத் தெரிவித்தமை எமக்கு மிகுந்த உற்சாகத்தைத் தருகின்றது. எதிர்ப்பைக் காட்டி நிற்பதோடு, விவேகமற்றதும் சமய விரோதமானதுமான இச் சட்டத்தால் எங்கள் சமுகத்துக்கு உண்டாகக்கூடிய தீமைகளைத் தவிர்த்தற்குத் தகுந்த நல்ல திட்டத்தை நன்கு ஆராய்ந்து அமைத்துச் செயலாற்ற வேண்டும். எதிர்ப்பைக் காண்பிப்பதோடு அவ்வித திட்டமொன்றை அமைத்துச் செயலாற்றுதல் அத்தியாவசியமாகும்.

போதிய தெய்வ நம்பிக்கையுடனும் தூரதிருஷ்டியுடனும் விவேகமாய்ச் செயலாற்றினல், எங்கள் சமுகம் கூடிய அளவுக்குத் தூய்மையடைந்து, கூடிய ஆற்றலைப் பெறுமென்பதில் எவ்வித சந்தேகமுமிருக்க முடியாது. இப்பொழுதுண்டாயிருப்பதிலும் கூடிய இன்னல்களை இந்து சமயம் முன்பும் முன்னிட்டு இன்றும் மேன்மையுடன் நிலைபெற்று வருகின்றது.

விடா முயற்சியுடனும் பந்திக்கப்படாத உள்ளத்துடனும் செய்யவேண்டியதைச் செய்க. அவ்வாறு செய்வோர் தலைசிறந்த நலனைப் பெறுவர் என்று பகவத்கீதை உறுதி கூறுகின்றது.

சு. சிவசுப்பிரமணியம்
கொழும்பு, 29-10-60.

### மணிவாசகர் மடாலய அன்னதான சபை

காரைநகர்ச் சிவன்கோயில் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்தக் கூட்டம் ஷெ மடாலயத்தில் சபைத்தலைவர் திரு. க. ஆ. கனகசபை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்ற வருடாந்தக் கூட்ட அறிக்கையும், வரவு செலவுக் கணக்கறிக்கையும் வாசிக்கப்பட்டுச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டன.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்பதை நாம் இதுபொழுது நினைவுகூருதல் வேண்டும். உயிரை உடலில் நிலைத்து நிற்கச் செய்யக்கூடிய சக்தி உணவுக்கே உண்டு. இவ்வுணவை அன்பர்களுக்குக் கொடுப்பதற்கும் அன்னதானஞ் செய்வதற்கும் பொருளுதவி புரிகின்றவர்கள் ஒவ்வொருவரும் பாக்கியசாலிகள், சென்ற ஆண்டு திருவெம்பாவைக் காலத்தில் 12569 அன்பர்களுக்கு இம் மடாலயத்தில் அன்னதானம் நடைபெற்றது இம்முறையும் அன்னதானம் செவ்வனே நடைபெற ஒவ்வொருவரையும் பொருளுதவி செய்யும்படி வேண்டுகிறேன் என்று தலைவர் பேசும்போது கேட்டுக்கொண்டார். உத்தியோகத்தர் தெரிவு பின்வருமாறு நடைபெற்றது: தலைவர்; திரு. க. ஆ. கனகசபை, இணைக் காரியதரிசிகள்: திருவாளர்கள்;இ வைத்திலிங்கம், சி, ஐயாத்துரை, தனதிகாரி; திரு.ச.மகேஸ்வரன். 15 பேர் கொண்ட ஒரு நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

—


## ஏந்திர கைத்தொழிற் சமாசம் வரையறுக்கப்பட்டது

"த சிற்றடல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
(தொலைபேசி 617—தந்தி ரெக்நோலொஜி)

பின்வரும் வேலைகள் செய்யப் பொறுப்பேற்கின்றது.

எல்லாவித நீர்க்குழாய்கள் (வாட்டர் பம்ஸ்), தட்டெழுத்து யந்திரங்கள், தையல் யந்திரங்கள், மின்சாரத்துறைப் பொருள்கள் (இலெக்றிக்கல் அப்பிளையன்செஸ்) உதாரணமாக;

(அ) மோட்டார்கள், மின்சத்தி ஆக்கக் கருவிகள் (ஜெனறேற்றேஸ்) உஷ்ண ஆக்கக் கருவிகள் (ஹீற்றேஸ்) பட ஒளிப் பதிவுக்கருவிகள் (சினிமா புரேஜெக்ரேஸ்)முதலியவைகளின் திருத்தம்.

(ஆ) தராதரம்பெற்ற மின்சார வேலை வல்லுனரால் வீட்டுக்கு மின் சாரக்கம்பியமைத்தல்,

(இ) பேர்ப்பலகைகள், அறிகுறிப்பலகைகள் (சயின்போர்ட்ஸ்) மைதீட்டியமைத்தல்.






### வெந்தீஸ் விற்பனை

### அடைவு நகைகள்

தா. சி. குமாரசாமி,
576/6 அம்மன்கோவில்ரூட்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

மேற்படி அடைவு கடையில் 1959-ம் ஆண்டு தை மாதம் 1-ந் திகதி தொடக்கம் 1959-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாது தவறியிருக்கும் நகைகள் 1960-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்,
வெந்தீஸ் மேஸ்தர்
வண்-வட-மேற்கு
ஆனைக்கோட்டை.

M 138 4, 11-11-60


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 6-11-60—12-11-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

காணிகள் காணிப் பொருள்கள் மூலம் இந்த வாரம் இலாபங்கள் நிச்சயம், சகோதர சகோதரிகளும் அதிக உதவியாயிருப்பார்கள். ஆனால் தேகசுகம் தொடர்ந்து திருத்தியீனமாயிருக்கும் சிறு குடும்பக்குழப்பங்களுக்கும் இடமுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

குடும்பச்சூழலில் இந்த வாரம் சண்டைகளுககும் பிழைஎண்ணங்களுக்கும் இடமுண்டு. கந்தோரிலும் தொந்தரவுகளுக்கிடமுண்டு உம்முடைய எல்லாக் கருமங்களிலும்கவனமாயிருக்கவும், ஆனால் பகைவர் உம்மை வெல்ல முடியாது,

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

தேகசுகம் தொடர்ந்து சிக்கலாயிருக்கும். குடும்ப நிலைமைகளும் அதிகம்திருத் தியாயிருக்கமாட்டா, ஆனால் உத்தியோகத் துறையில் நல்ல வாரம். தனலாபங்களும்நிச்யம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

கண் நோய்களுக்கிடமுண்டு. இனத்தவர்களுடன் சண்டைகளுக்கும் இடமுண்டு. ஆனால் பணத்துறையில் நல்ல வாரம். உம்முடைய இடைஞ்சல்கள் பலவற்றை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். பகைவர்அழிவுக்கிடமுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

குடும்பக் கருமங்கள் இந்த வாரம்குழப்பமாயிருக்கும், ஆனால் உத்தியோகத்துறையில் ஒரு நல்ல வாரம். பழைய முதலீடுகள் நல்ல பலனைத் தரும், கமத்தொழில் முயற்சிகளிற் சித்திக்கும் இடமுண்டு,

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்ல வாரம். இளைய சகோதர சகோதரிகள் தொடர்ந்து உதவியாயிருப்பார்கள். ஆனால் ஏனைய இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு உத்தியோகத் துறையில் ஒரு நல்லவாரம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

வாரத்தின் முதல்நாள் கவனமாய்க் கழிக்கவேண்டும், சிறுசுகவீனங்களுக் கிடமுண்டு. வாரமிகுதி பணத்துறைக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும். பிதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது செலவுண்டாக்கக்கூடும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

திங்கள் செவ்வாயும் புதன் காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும், வாரமிகுதி உத்தியோகக் கருமங்கள் வியாபாரக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும். ஆனால் தேகசுகம்பற்றிக் கவனமாயிருக்கவும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

முன் அரைவாரம் புதுக்கருமங்களுக்கு நல்லாயிருக்கும். தனலாபங்களும் நிச்சயம். ஆனால் தேகசுகம் அதிகம் திருத்தியாயிராது. பிதாவழி இனத்தவர்களும் உமக்கு அதிக கோபமுண்டாக்குவர். புதன் பிற்பகல் வியாழும் வெள்ளி கவனமாய்க் கழிக்கவும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

இந்த வாரம் மனச்சமாதானமிருக்கமாட்டாது. உம்முடைய கருமங்களில் அதிக எதிர்ப்பையும் கண்டனங்களையும் நீர் முன்னிட வேண்டிவரும். ஆனால் இறுதியில் நீர் விரும்புகிறபடி செய்யக்கூடியதாயிருக்கும். வாரத்தின் கடைசி நாளைக் கவனமாய்க்கழிக்கவும்,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

குடும்பக்கருமங்கள் திருத்தியாயிருக்கமாட்டா. தேக சுகமும் பாதிக்கப்படக்கூடும். ஆனால் உத்தியோகத்துறையில் ஒரு நல்ல வாரம் தனலாபங்களும் நிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

இனத்தவர்களுடன் சிறு சண்டைகளுககிடமுண்டு. ஆனால் உம்முடைய பகைவரை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். தேகசுகம் திருந்தும். வார இறுதியில் புகழும் சமூகசித்தியும் நிச்சயம்.

## குருமகா சந்நிதானமவர்களின் கந்தசஷ்டி வழிபாடு

சிதம்பரம். ஐப்பசி 27. திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. கயிலை சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் வழக்கம்போல் கந்தசஷ்டி விழாவிற்கு திருச்செந்தூர் சென்று 6 நாட்களும் உபவாசமாக இருந்துகொண்டு முதல் திருநாள் அன்று அந்தணர்களுக்குப் பொருள்கள் தானம் செய்து தீர்த்தமாடி ஸ்ரீ. செந்திலாண்டவன் சன்னிதிக்குச் சென்று ஸ்ரீ. சுப்பிரமணிய சுவாமிக்கும ஸ்ரீ. ஆறுமுகக் கடவுளுக்கும் விலை உயர்ந்த பொன்னுடைகள் சாற்றுபடி செய்து வழிபாடுகள் செய்து கொண்டார்கள்,

ஸ்ரீ. ஆறுமுகப்பெருமானுக்குத் தினமும் 3 சண்முகார்ச்சனைகள் வீதம் 6 தினமும் சண்முகார்ச்சனைகளும், ஸ்ரீ. சுப்பிரமணிய சுவாமிக்குப் பெரும் பொருள் திட்டத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் (சஷ்டி அன்று) நடத்தி வழிபட்டு அன்பர்களுக்கு அபிஷேகத்திருநீறு, பஞ்சாமிர்தம் அபிஷேகப்பால் முதலிய பிரசாதங்களை வழங்கினார்கள்.

(திரு. மா. பா. தினமணிநிருபர்)


# தொழில் நுட்பக் கல்லூரி

( SCHOOL OF TECHNOLOGY )

சுண்டிக்குளி யாழ்ப்பாணம்

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை (G. C. E. Advanced Level) பொருளாதாரம் (Economics):—

ஆகஸ்றில் வகுப்பு ஆரம்பமாகின்றது. பாடம் ஒன்றுக்கு மாதச்சம்பளம் ரூபா. 10/-. தகுதிவாய்ந்த கல்வியறிஞர் ஒழுங்கான பயிற்சியளிப்பார். சேரவிரும்பும் மாணவர் உடனே விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

தலைமை ஆசிரியர்.



யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
நிருப்பர்

Std 14


## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊரெழு, சுண்ணாகம்
சின்னத்துரை பரராசசிங்கம்
கைம்பெண் செல்லம்மா
(சின்னத்துரை பரராசசிங்கத்தின் ஆதனத்துக்கு தத்துவகாரி)
வழக்காளி.

வழக்கு: இல. M B. 3113
எதிராக
சுண்ணாகம்
வேலு சுப்பிரமணியம்
கைம்பெண் சின்னாச்சி
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B 3113-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1960-ம் வருஷம் கார்த்திகை மாதம் 12-ந் திகதி (12-11-60) சனிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-ரூபா 1627-ம் 26-10-59 தொடக்கம் 8-3-60 வரைக்கும் ரூபா 1000-க்கு 10வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத்தொகைக்கும் பணம் முற்ருக இறுபடும் வரைக்குப் 5 வீதவட்டியும், கோட்டுச்செலவ ரூபா 192-97 சதமும்.

காணியின் விபரம்

வடமாகாணம். யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதி, உடுவில் கோயிற்பற்று, சுண்ணாகம் இறை, "மைலிணி" (MAILINI)நிலப்பரப்பு 3 குளி 9 பனைகளும், வடலிகளும், கிணறும், வீடும், மேற்கில் வயித்தியலிங்கம் கைம்பெண் இளையபிள்ளையின் காணி வடக்கெல்லை ஓரமாகவுள்ள 4 முழப்பாதை உரிமையும், எல்லை கிழக்கு மயில்வாகனம் பொன்னம்பலத்தின் ஆதனம். வடக்கு ஷ்ை பொன்னம்பலத்தின் ஆதனம். மேற்கு ஒழுங்கை முகப்பும் வயித்தியலிங்கம் கைம்பெண் இளையபிள்ளையின் ஆதனமும். தெற்கு மயில்வாகனம் பெண் சுந்தரத்தின் ஆதனம்.

சே. பாண்டித்துரை

கொம்மிஷனர் &விலைமதிப்பாளர்.
Commissioner of Sales

மல்லாகம், 3-10-60.
M 137 4—11—60.

## தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம்

"சிங்களம்மட்டும்" சட்டத்தாற் பாதிக்கப்படும் தமிழ் அரசாங்க ஊழியர்கள் ஒன்றுகூடித்தங்கள் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஒரு சங்கம் கொழும்பில் அமைத்துள்ளனர்.

## ஒருமுகப்பட்ட கத்தோலிக்க எதிர்ப்பு

கொழும்பு தலைமைப் பிசுப்பாண்டவர், கண்டி, காலி, யாழ்ப்பாணம், சிலாபம் பிசுப்பாண்டவர்கள் ஆகியோருடன் திருக்கோணமலைக் கத்தோலிக்க தலைமைப் பீடாதிபதியுமாகிய அறுவரும் கைச்சாத்திட்டு அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதை ஒருமுகமாய் எதிர்க்கும் அறிகை ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர்.

## உலக மத மத்திய நிலையம்

அமெரிக்காவில் மசாட்சூசெட்ஸைச் சேர்ந்த கேம்பிரிட்ஜ் என்னுமிடததில் நவமானதொரு மத பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, ஏற்கனவே இந்நிலையம் ஆசியாவிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் பொதுமக்களிடையே பேரார்வத்தைத் தூண்டியுள்ளது.

ஹார்வாட் பல்கலைக் கழகததில் உலகமதங்கள் பயிற்சி நிலையம் தற்பொழுது தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்தாலும், பல்கலைக் கழகத்திடலில் தற்பொழுது இதற்கென நிரந்தர கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

இந் நிலையத்தை நடாத்துவதற்கு வண. டாக்டர் ஸிமேலற்றர் பொறுப்பாக விருக்கிறார். பல்கலைக் கழகத்தில் நிரந்தரமாக அமைக்கப்படும் உலக மதங்கள் மத்திய நிலையம் பிறமதங்களைப் பற்றி அறியவும், ஆராயவும் தீராத ஆர்வமுள்ள அமெரிக்கப் பொதுமக்கள் வழங்கிய நிதி உதவியுடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது, இத்தகைய திட்டம் ஆரம்பிக்கப்பட்டதனுல் அமெரிக்கர்கள் தாம் பின்பற்றும் மதப்மீது மேலும் நம்பிக்கை கொண்டதுடன் தம்மைப் போன்றே உலகில் ஏனைய நட்டவர்களும் பிற மதங்களைப்பற்றியறியப்பேராவல் கொண்டுள்ளார்கள் என்பதையும அறிந்துள்ளனர்.

இந் நிலையம் ஆசியாவிலிருந்து அமெரிக்கா வரும் இந்து, பௌத்த இஸ்லாமிய மாணவர்கள் அமெரிக்கர்களுடன் ஒன்றுசேர்ந்து பிறமதங்கள்பற்றிப் பயிலவும், ஆராயவும் தக்கதோர் சூழ்நிலையை ஏற்படுத்துமெனத் தாம நம்புவதாக டாக்டர் ஸிமேலற்றர் தெரிவித்தார்.

(அ. - செ.)


இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கிறது!

# பலவிருத்திக் குளிகை

இது ஆச்சரியமான குணம் உடையது

அசதி, பலவீனம், உடல்மெலிவு, நரம்புததளர்ச்சி, மறதி தாது பலவீனம் முதலியவைகளை நீக்கி புதிய இரத்தத்தை நரம்புகளுக்குள் புகுத்தி இழந்துபோன பலத்தையும் வலிமையையும் மீட்டிக் கொடுத்து வாழ்க்கையை வளம்பெறச் செய்விக்கிறது. 120 குளிகை புட்டி 1 க்கு ரூ. 12-00,

## மூல வியாதிக்கு

நாக பஸ்பம், கருணை லேகியம் சாப்பிடுங்கள்
ஆப்ரேஷன் அவசியமில்லை. முளை தானே கரைந்துவிடும்.

சீழ் மூலம், இரத்தமூலம், மலபந்தம், குத்தல் கடுப்பு முதலிய 9-வித மூல வியாதிகளும் குணமாகிறது.

பஸ்பமும், லேகியமும் 24 நாள் செட் விலை ரூ. 20-00

மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S.I.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய தீட்சை

—————:0:—————

திருவருளை முன்னிட்டு நிகழும் சார்வரிஙூ ஐப்பசிமீ உகூஉ (11—11—60) வெள்ளிக்கிழமையன்று யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் ஷை சபை நாவலர் மண்டபத்தில் சமய தீட்சை, வேதாரணியம் ஸ்ரீமத். க. சோமாஸ்கந்தக் குருக்களவர்களால் காலை 9 மணி தொடக்கம் செய்து வைக்கப்பெறும்.

முதியோர், பள்ளிக்கூட மாணவர், மாணவிகள் ஆகிய யாவரும் மேற்குறித்த தினத்தில் சமய தீட்சையைப் பெற்றுக் கொள்ளலாம்.

சமய தீட்சை பெறுபவர்கள் யாவரும் ஆசாரசீலராய் வருவார்களாக.


சைவ பரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 3-11-60,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,

J, 256 4—11—60.

# துப்பறியும்சுப்புமாமா

## சுப்புமாமா சொல்வது




பழைய கூத்துக்களில் விகடமாகப் பாடுவார்கள் "வேகாதுன்றன் பருப்பு — வீசுவேன் காலிற்செருப்பு" என்று. இந்தப்பாட்டை நடித்துக்காட்டிய பாராளுமன்றத்து அங்கத்தவரை நேரிற் கண்டு கைகுலுக்கி வணக்கஞ் செலுத்த வேண்டுமென்று வெளிப்பட்ட சுப்புமாமா அந்த அங்கத்தவர் செருப்பைக் கையில் எடுத்ததற்குப் பிராயச்சித்தமாக ஆறுநாட்களுக்குப் பாராளுமன்றத்திற்கு வெளியே நின்றுகொள்ளும்படி கட்டளையிடப் பட்டிருப்பதையறிந்து திரும்பிவிட்டார்.

நேயர்கள் நெஞ்சம்

## பள்ளிக்கூடங்களை அபகரிப்பது தர்மமல்ல

மக்களுக்கு சமயம் பாஷை, இரண்டும் இரு கண்கள். அரசே இரண்டையும் வளர்க்க வேண்டியது. ஆனல் அரசே இந்த உரிமைகளை எடுக்க முயற்சிக்கிறது. தமிழும் சைவமும் ஐந்து கண்டங்களிலுமிருந்ததாகத் திருமந்திரம் செய். 1619 கூறுகிறது.

தமிழ் மண்டலம் ஐந்துந்
தாவிய ஞானம்
உமிழ்வதுபோல
உலகந் திருவார்
அவிழ மணமும்
எம் ஆதி அறிவும்
தமிழ் மண்டலம்
ஐந்தும்தத்துவமாமே (1619)

சிங்களம் சோனகம் முதலிய பதினெட்டுப் பாஷைகளும் தமிழினின்றும் பிறந்தனஎன்பது ஆராய்ச்சியாளர்கருத்து. அக்காலத்தில் பண்டிதர்கள் பதினெட்டுப் பாஷைகளிலும் வல்லுனராய்இருந்தார்கள்.

பண்டிதராவார்
பதினெட்டுப் பாஷையும்
கண்டவர் கூறும்
கருத்தறிவார் என்க.
பண்டிதா தங்கள்
பதினெட்டுப் பாஷையும்
ஆண்டமுதலான் ஆறஞ்
சொன்ன வாறே. (1517)

(தமிழ் 3000)

எல்லாரும் எல்லாப் பாஷையையும் படித்தல் விரும்பத்தக்கது, ஆனல் எல்லாரும் ஒருபாஷையைப் படிக்க வேண்டுமென்பது விரும்பத் தக்கதல்ல.

தமிழும் சைவமும் இராமாயண காலத்திலிருந்ததாகத் தெரிகிறது. தற்காலம் எங்கள் அரசு நெடிய உறுதிபெற்றதாகத் தெரியவில்லை. ஐந்து வருஷம் மூன்று வருஷம் ஆறு மாதங்களிலும் தேர்தல் நடந்திருக்கிறது.

1961-ம்ஆண்டில்சிங்களம் தெரியாதவர்கள் உத்தியோகத்திலிருக்க முடியாதென்ற சட்டம் வரும் பொழுது, எங்கள் ஏழைத் தாய்மார்கள் தாங்கள் சமைக்கும் அரிசியில் பிடி அரிசிபோட்டும் நாளொன்றிற்கு மூன்றுபணம் சம்பளம் எடுப்பவன் ஒரு சதமும், மாதச்சம்பளம் எடுப்பவன் ஒரு ரூபாவும், தச்சு, கொல்வேலை,சீவல்தொழில் செய்பவர்கள் வரிசேர்த்தும் உருவாக்கி, தங்கள் பாஷை, சமயம், பழைய பண்பாடு முதலியவற்றை விருத்தி செய்வதற்காகத் தங்கள் கிராமங்களில் நிறுவிய பள்ளிக்கூடங்களை அரசு அபகரிப்பது அன்[illegible]

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# நாய்ப்பல்லில் விஷமுண்டாகும் காரணம்

## வீட்டுப்பிராணிகளாலுண்டாகும் விஷத்தை யகற்றும் வழி

விஷ வைத்தியர்
திரு. க. சிற்றம்பலம் அவர்கள்

முற்றொடர்—3.

**பல்லிகள்:**

இவைகள் நமக்கு நன்மொழிகூறும் பிராணியாக நாம் மதிக்கின்றோம். இதன் விஷமும எங்களுக்கு மாறுதலைக் கொடுக்கும் தன்மையது. இதன் எச்சம்பட்டால் அந்த இடத்தில் சிறுகொப்புளங்க ளுண்டாகும். பின்னர் கொப்புளங்கள் உடைத்துப் புண்ணுண்டாகும். இதன் எச்சம்பட்டால் உடனே வெந்நீராற் கழுவுதல் வேண்டும். இதுவிரைவில் மக்களைக் கடிக்காது. வசிக்கும் இடத்துக்கேற்ப இவையும் நிறமாறுபாடு உடையவையாயிருக்கின்றன. பல்லி முட்டைகள் சூரிய உஷ்ணத்தால் பொரித்து, உடனேயே குஞ்சு சீவிக்கும் சக்தியை உடையதாக இருக்கும்.

**வண்டுகள்!**

இவற்றில் பல இனங்களுண்டு. சில இனவண்டுகள் கொடிய விஷமுடையவை கடித்தவுடன் கடுத்தல். திணவு, எரிவு முதலியன உண்டாகும். இவை கடித்த உடன் குப்பைமேனியின் சாற்ருல் கடித்த இடத்தை உரஞ்சினுல் விஷமகலும்.

**குளவிகள்:**

இவற்றிலும் பல இனங்களுண்டு. பெருங்குளவி, சிறுகுளவி, மூத்திரக் குளவி, வேட்டுவாளியன்,தேன்குளவி என்பன. பெருங்குளவி கொடிய விஷமுடையது. தலையில் இவைகள் பலதாக்கிஞல் உடனே மரணமும் சம்பவிக்கும். இது தனது கொடுக்கால் தாக்கும். கொடுக்கிலுள்ள விஷஆணியை கடித்த இடத்திற்செலுத்திவிடும். அந்த ஆணி யிருக்கும்வரை அந்த இடத்தில் புண் உண்டாகிச் சீழ்வடியும். கடுப்புத் தாங்கமுடியாது துன்பப்படக் காரணமாகும். பெருங்குளவியில் இராசா, இராணி என இரண்டுண்டு, இவை தாக்கிஞல் கொடிய விஷமாகும். இதற்கு உடனே தக்க சிகிச்சை முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். வேட்டைவாளி என்னும் குளவி கறுத்த உருவமுடையது. இது பறந்து கலைத்துக் கடிக்கும். இது சிறுபுழுக்களைக் கொண்டுசென்று கூடு கட்டி வளர்க்கும்.

**நாய்கள்:**

இவற்றில் பல இனங்களுண்டு. இவற்றின் விஷமும் கொடியதாகும். எலும்புகள் கடிக்காத நாய்கள் கடித்தால் விஷம் அதிகமாகும். இவற்றின் பல்லிலுள்ள அழுக்குகள் எங்கள் இரத்தத்தில் கலப்பதால் விஷமுண்டாகின்றது.

**விசர்நாய்:**

இது கொடியது. இது எந்தப் பிராணிகளைத் தீண்டினலும் உடனே விசர் உண்டாகி அதைப்போலக் குரைக்க ஆரம்பிக்கும். இதற்குத் தற்காலத்தில் ஆங்கிலவைத்தியத்தில் ஊசிகளுண்டு அவைகள்மூலம் இதைக் குணப்படுத்தலாம், எந்தநாய் கடித்தாலும் நாம் கவனமாகச் சிகிச்சை முறைகளைக் கையாளல் வேண்டும். நாயால் கடியுண்டவர்கள் ஆட்டிறைச்சி உண்பது நன்லதல்ல நாய் கடித்தவுடன் நாய் எப்படிப் பட்டது என ஆராய வேண்டும். நாய் தானே கடித்தது, புண் மாறிவிட்டது எனச் சிலர் கவலையீனமாக இருப்பதால் கடித்த மூன்றுமாதம், ஆறு மாதம், ஒரு வருடங்களின் பின்னரும் கடிபட்டவர்களுக்கு விஷம் உண்டாகி ஏற்புவலி ஏற்பட்டு ஈற்றில் மரணத்தின் வாயிலில் விடுவதை நாம் கண்கூடாகக் காணக்கூடியதாகவும் இருக்கின்றது. ஆகவே நாய்க் கடியை அலட்சியம் செய்வதால் நாம் வளர்த்த நாயே, நன்றிக்குரிய நாயே, நம்மைக் கொல்லும் நாயாகியும்விடும்! நாம் வீட்டில் வளர்க்கும் நாயை அடிக்கடி குளிப்பாட்டல் வேண்டும். இரண்டு கிழமைக்கு ஒரு தரமாவது எலும்புகள் கொடுக்க வேண்டும். எலும்புகடிக்கும் நாயில் விஷம் குறைவாகக் காணப்படும்; காரணம்; பல்லிலுள்ள அழுக்கு எலும்பு கடிப்பதால் அகலுகின்றது. பல்லிலுள்ள அழுக்கே எங்களுக்கு விஷத்தை அதிகமாக்குகின்றது. நமதுநாட்டில் நாயை எல்லா இடங்களிலும் காணலாம். எத்தனையோ நோயுள்ள நாய்கள் தெருக்களில் அலைந்து திரிவதை நாம் காண்கின்றோம். இதுபற்றி அதிகம் சிரத்தை காட்ட வேண்டியவர்கள் கிராமச் சங்கங்கள், நகரசங்கங்கள், பட்டின சங்கங்கள். அலைந்து திரியும் நாய்களை அகற்றிச் சனங்களுக்குத் தொல்லை கொடுக்காது பாதுகாப்பது அவர்களின் பிரதான கடமையாகும்.

—தொடரும்.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்மதிப்பைப்பெற்ற ஆராய்ச்சி எழுத்தாளர்

ஸ்ரீ. இ. சுந்தரராஜ சர்மா

( முற்றொடர் - 3 )

**ஆசிரியத் தொழிற் பிரவேசம்**

பிள்ளை அவர்கள் காலமானதும் கணேசையர் ஆசிரியத் தொழிலிலீடுபட்டனர். யாழ்ப்பாணத்திற்கு வந்த விவேகானந்தரின் நினைவாக, வண்ணர்பண்ணையில் நிறுவப்பட்ட விவேகானந்த வித்தியாசாலையே ஐயர் அவர்கள் முதன்முதலாக ஆசிரியத் தொழில்புரிந்த இடமாகும். இவ்வித்தியாசாலை தறபோது வைத்தீஸ்வர வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மூன்று, நான்கு வருடங்களின் பின்னர் ஐயர் அவர்கள் தாம் கல்விபயின்ற இடமாகிய புன்னாலைக்கட்டுவன் சைவ வித்தியாசாலையிலும், வயாவிளானில் தாம் நிறுவிய பாடசாலையிலும் ஆசிரியராய்க் கடமையாற்றினர். இவர் தாபித்த பாடசாலை இருவருடங்களில் மூடப்படும் நிலை எய்தியது.

இந்தியாவுக்கு அடிக்கடி செல்லுமிவர் அங்கு தட் உறவினரான காசிவாசி செந்திநாதையர் அவர்களிடத்து. சமய சாஸ்திரங்களையும், பட்டினத்தார், தாயுமானசுவாமிகள் பாடல்களையும் கற்றுணர்ந்தார்.

**திருமணம்**

வருத்தலைவிளானில் பிரம்மஸ்ரீ யோகவனஐயர் அவர்கள் சோதிடத்தில் வல்லுனராய்ப் பல பிரபுக்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமானவராக விளங்கினர். இவரது மனைவியின் பெயர் ஆச்சிக்குட்டியம்மையாராகும். இவர்களின் புதல்வியான அன்னலட்சுமி என்னும் நங்கையை இல்வாழ்க்கைத் துணையாக 1909-ம் ஆண்டு ஏற்றுக் கொண்டார். பிரம்மஸ்ரீ. யோகவனஐயர் அவர்கள் தம் மருகரின் பெயரில் தையிட்டியில் கணேசவித்தியாசாலை என ஒரு வித்தியாசாலையை நிறுவினர். இவ்வித்தியாசாலையின் தலைமையாசிரியராகக் கணேசையர் அவர்கள் கடமையாற்றினர்.

—தொடரும்.

முதல் மந்திரி இல்லாத
பாராளுமன்றம்

———

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தநாள் தொடக்கம் இன்றுவரையில் முதல் மந்திரி பாராளுமன்றத்தில் இருக்கவில்லை, சபைமுதல்வரே சில ஒழுங்குகள்பற்றி ஆலோசிக்க முடியாமலிருக்கின்ருர்.

முதல் மந்திரிக்குப் பணம் ஒதுக்கும் தொடர்பிற் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார் ஸ்ரீ. பிலிப்பு குணவார்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களவாரமட நூற்றுண்டுவிழா

ஆங்கில ஆட்சியில் அடிமையுற்றிருந்த காலத்தில், தாய்நாட்டில் செம்மல் சிதம்பரனுர், கப்பல் ஓட்டி அடிமைத்தளை போக்க வழி வகுத்தார். இறைக்கு நூறு ஆண்டுகட்கு முன் சேய் நாட்டில் சிதம்பரசுப்பையச் செட்டியார், இராஜலட்சுமி, வீரலட்சுமி, தைரியலட்சுமி என்றழைக்கப்பட்ட மூன்று பெரிய கப்பல்கள் வைத்து, இந்தியா, பர்மா ஆகிய நாடுகளுடன் வியாபாரம் செய்தார். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே "திரைகடல் ஓடியும் திரவியம்தேடு" என்ற தமிழ் முதுமொழிக்கிணங்க, உலகெங்கணும் சென்று வியாபாரம் செய்த பெருமை தமிழருக்குண்டு. பெரும் சமுத்திரங்களெல்லாம் தமிழர் தம் பெருந்தெருக்களாக அமைந்திருந்தன, வியாபாரம் செய்தது மாத்திரமல்லாமல், சென்ற இடங்களிலெல்லாம் தம் கலையையும் கலாசார சமயப் பண்பாடுகளையும் பரப்பினர். சரித்திர வல்லுனர், புதைபொருள் ஆராய்ச்சியாளர் ஆங்காங்கு கண்டெடுத்த சின்னங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன். கம்போடியா நடனக்கலை இந்தியப் பரத நாட்டியத்தை ஒத்திருக்கின்றது. இன்றும் தாயலந்து அரண்மனையில் திருவாசகத் திருவெம்பாவை ஓதி வருகின்றனர் ஏன், சீன தேசத்திலும் யப்பான் தேசத்திலும் புத்த சமயத்தைப் பரப்பிய பெருமைகூடத் தமிழருக்கே உண்டு.

செட்டியார் அவர்களின் கப்பல்கள் வியாபாரப் பொருட்களை ஏற்றி இறக்கியதுடன் நிற்காமல், நாவலரின் வீரமுழக்கத்தால் விழிப்புற்ற சைவப்பெருமக்களை காசி, காயா முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரைக்கும் ஏற்றியும் சென்றன. அக்காலத்தில் மூட்டைக்கடியையும் தொற்று நோய்களையும் விலைக்கு விற்கும் வாடி வீடுகளும், விடுதிகளும் இல்லாத காலம். யாத்திரீகர்களின் வசதிக்காக ஊர்காவற்றுறையில் மங்களவார மடத்தைக் கட்டுவித்தார் செட்டியார் அவர்கள். இங்கு பல காணிகளையும் இம்மட நிர்வாகத்திற்குத் தம் சொந்தச் செலவில் வாங்கிவிட்டிருக்கிறுர்.

இம்மடத்தின் நூற்றுண்டு விழா சமீபத்தில் கொண்டாடப்பட விருக்கிறது. கவியோகி சுத்தானந்தபாரதியார் அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமைதாங்க வருகின்றுர்கள். செட்டியார் அவர்களின் வழித்தோன்றலான திரு. சி. முத்துக்குமாரன் இந் நூற்றுண்டு விழாவிற்கு எடுக்கும் முயற்சி பாராட்டுக்குரியது. இத்தொடர்பில் அழகிய மலர் ஒன்றும் வெளிவரப்போகின்றது. வட.கோவை சபாபதி நாவலருக்கு, வருத்தலைவிளான் கணேசஐயருக்கு விழா எடுத்தார்கள். அச்சுவேலி குமாரசாமிக்குருக்களுக்குப் பாராட்டுவிழா நடத்தினுர்கள். "எல்லாம் தமிழ்" இயக்கக் கிளர்ச்சியும் நடைபெறுகிறது. இவையெல்லாம் ஈழத் தமிழரிடத்தே விழிப்புணர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் காட்டுகின்றன.

செட்டியார் அவர்கள் நாவலர் காலத்திலே வாழ்ந்தவர். அவர் நாவலரின் உறவினருமாவார். நாவலரின் வண்ணுர் பண்ணைச் சிவன்கோவில் பிரசங்கங்களே செட்டியார் அவர்களைச் சிவபுண்ணிய சீலராக்கின என்றும் கூறலாம். செட்டியார் அவர்களிடத்தில் நாவலர் அளப்பிலா அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். இதற்குக்காரணம் செட்டியாரவர்களும் அவர் குடும்பத்தினரும் நாவலர் உபதேச மொழிப்படி வாழ்ந்து வந்தமையே. சைவாசாரப்படி நித்திய சிவபூசை செய்து வந்தவர் செட்டியாரவர்கள். இதனுலேயே நாவலரவர்கள் தம் உற்ற உறவினர் உடன் பிறந்த சோதரர்கள் இருந்தும், செட்டியார் குடும்பத்தைச் சேர்ந்த சபாபதிச் செட்டியாரையே தன் ஈமக்கிரியைகளைச் செய்ய நியமித்தார். செட்டியார் அவர்களின் புத்திரன் பசுபதிச்செட்டியாரும் தந்தை வழிப்படியே பல புண்ணியச் செயல்களில் ஈடுபட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, சைவபரிபாலன சபை ஆகிய தாபனங்களின் தாபன கர்த்தாக்களுள் பசுபதிச் செட்டியாரும் ஒருவர். நாவலர் விருபபியவாறு திருக்கேதீச்சுவர புனருத்தாரண ஆரம்ப வேலைகளில் ஈடுபட்ட பெருமையும் பசுபதிச் செட்டியார் அவர்களுக்கே உண்டு. செட்டியார் அவர்கள் வசித்த இடத்தில் தானதருமம் தண்ணீர்போல் பெருக்கெடுத்தோடிற்று. அதனுலேயே இந்த இடத்தைத் தண்ணிச் சாலடி என்று இன்றும் அழைக்கிறுர்கள்.

வாழ்க, கப்பலோட்டிய ஈழச் செம்மல் சிதம்பரசுப்பையச்செட்டியார் திருநாமம்

வாழ்க மங்களவார மடம்!

திரு. அ. சபாபதிப்பிள்ளை,
நாவலப்பிட்டி.

---


சங்கானை
அரசடி வயிரவர் கோவில்
**தேர்த்திருப்பணி**
**விஞ்ஞாபனம்**

சிவநேயச் செல்வர்காள்!

சங்காவன அரசடியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வயிரவப்பெருமானுக்குத் தேர்த் திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இத் திருப்பணியைப் பூர்த்தி செய்யத் திரவியம் வேண்டி இருப்பதால் சிவநேயச் செல்வர்களை உதவி செய்யும் வண்ணம் வேண்டுகின்றேம். பணம் பெறுபவரிடம் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பணம் அனுப்புபவர்கள் கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,
பொ. அப்பாத்துரைஐயர்.
அரசடி வயிரவர்கோவில்,
சங்கானை,
F 191 19-9-60.


---

## கிராம சேவைத் திட்டத்திலும் சிங்களமாம்!

விதானைமாருக்குப் பதிலாய், கிராமசேவைத்திட்டமொன்று அரசாங்கத்தால் அமைக்கப்படுகின்றது. அத்திட்டத்தின் விசேட நிபந்தனைகள் பின்வருமாறு:-

1. பிரிவுகளுக்கு வேறு வேருய்க் கல்விப்பகுதியால் நடத்தப்படும் பகிரங்க போட்டிப் பரீட்சைமூலம் சேவையாளர் தெரியப்படுவர்.

2. விண்ணப்பஞ் செய்வோர் 22 வயசுக்கும், 35 வயசுக்கும் உட்பட்டவர்களாயிருத்தல் வேண்டும்.

3. 1914-ம் ஆண்டுக்கு முன் ஜே. எஸ். சி. பரீட்சையிற் சித்திபெற்றவர்களும் அதன் பின்பானுல் எஸ். எஸ். சி அல்லது ஜி. சி. ஈ. பரீட்சைகளிற சித்தியடைந்தவர்களாயுமிருத்தல் வேண்டும்.

4. குறித்த பிரிவில் பத்துவருடகாலம் வசித்தவர்களாதல் வேண்டும்.

5. பயிற்றப்பெற்றபின் பரிசோதனைக் காலமாய் மூன்று ஆண்டுகள் கடமையாற்ற வேண்டும்.

6. சிங்களம் மூலம் தெரிவு செய்யப்படாதவர்கள் சிங்களமொழி அறிவுத் தகுதிபெறவேண்டும்; பெருவிட்டால் சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

இப்பொழுது சேவையிலிருப்பவர்களுள் 45 வயசுக்கு மேறபட்டவர்கள் ஓய்வு பெறவேண்டியவர்களாவர். ஏனையோர் புதிய சேவையில் இடம்பெறும் வசதிகள் கொடுக்கப்படுவார்கள்.

---

## திருக்கேதீச்சர நிலை

1-ம் பககத் தொடர்ச்சி

உயர்ச்சியடையுமெனவும் அவர் பேசும்போது குறிப்பிட்டார்

சைவப்புலவர் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை, ஸ்ரீமத் சோ. செல்லக்கணபதிதேசிகர், இராமநாதன் கல்லூரி மாணவிகள், கொழும்பு திரு. இராமச்சந்திரன் அவர்களுடைய புத்திரிகளும் பிறரும் பத்திப்பாடல்களை அன்புடன் ஓதி அடியார்கள் சிவசிந்தனையுடன் தவமுறையில் காலத்தைக்கழிக்க உதவி செய்தார்கள்.

திங்கட்கிழமை நிகழ்ந்த கும்பாபிஷேக வைபவத்தில் இலங்கையின் பல பாகங்களில் இருந்து வந்த அடியார்கள் கலந்து சுவாமி தரிசனஞ் செய்து கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதனுடைய திருவருளைப்பெற்றுப்பரவசமானுர்கள்,

---

# கந்தன் என்பதுபற்றி

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

எழுதிய நூல்களையும் அன்றி வெளியிட்ட கட்டுரைகளையும் உலகம் அறிய வெளிப்படுத்துக என்பது அது. இது அவர் கடமை.

இருக்க, கிரேக்க மன்னர் மகா அலெக்சாண்டர் இந்திய நாட்டின்மேல் நடத்திய படையெடுப்பைப்பற்றிய குறிப்புக்கள் சாதாரணமாக எல்லாச் சரித்திர நூல்களிலும் காணலாம். சரித்திரநூல்களில் காணப்படுகிறபடியல் இக்கதை உண்மையென்று கூறமுடியாது. அலெக்சாண்டரின் இந்திய படையெடுப்பைப் பற்றி இந்தியாவில் ஒருவித சான்றுகளும் இல்லை. இதனை இந்திய சரித்திராசிரியர்களுள் முதன்மையானவர் எனக் கருதப்படும் கலாநிதி வின்சன். ஏ. சிமித் தமது "இந்தியாவின் பூர்வீக சரிதம்" என்னும் நாலில் சந்தேக விபரீத மறக் கூறியிருக்கிறுர். (பார்க்க:- Early History of India Fourth Edition. pp. 117 & 118). அவர் கூற்று வருமாறு. "அலெக்சான்டர் இந்தியாவைவிட்டு நீங்கி மூன்று வருடங்களுக்குள் அவருடைய உத்தியோகத்தர்கள் எல்லோரும் துரத்தப்பட்டார்கள், அவருடைய பட்டாளங்கள் அழிக்கப்பட்டன, அவருடைய ஆட்சியைப்பற்றிய அடையாளம் ஒன்றுமில்லாமல் மறைந்துவிட்டது... ... இந்தியாவிலுள்ள இந்து, பௌத்த சமண நூலாசிரியருள் ஒருவரேனும் அலெக்சாண்டரைப் பற்றியோ அவருடைய செயல்களைப் பற்றியோ ஒரு சிறு குறிப்பேனுங்கூறியிருக்கவில்லை" (Within three years of his departure, his officers had been ousted, his garrisons destroyed and almost all trace of his rule disappeared"....No Indian author, Hindu, Buddhist or Jain makes even the faintest allusion to Alexander or his deeds" இதே கருத்தையே கலாநிதி பாஷம் என்பவரும் கூறுகிறுர். அவர் இலண்டன் பல்கலைக்கழகச் சரித்திரப் பேராசிரியர். "Alexander made so small an impression upon India that in the whole of her surviving literature there is no reference to him. In later centuries Indians came to knew the Greeks, but of Greek influence at this time there is scarcely a trace." (Dr. Basham—Reader in Indian History, University of London).

மகா அலெட்சாண்டர் இந்தியாவின்மேல் படையெடுத்துவந்ததாகக் கூறும் நூல்கள் எல்லாம் கிரேக்க நூல்கள். இவைகள் கொடுக்கும் செய்திகள் ஒன்றுக்கொன்று முரணுகவும் பெரும்பாலன கட்டுக்கதைகளாகவும் இருக்கின்றன. இது எமது கருத்தன்று. —தொடரும்.

---


## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

சரசாலை மூத்தையா கணபதிப்பிள்ளை வழக்காளி.

எதிராக

இல: 1851,

1. சரசாலை சின்னையா சுப்பிரமணியமும் பெண்
2. ,, மகேஸ்வரியும்
3, ,, கணபதிப்பிள்ளை கணேசலிங்கமும் பெண்
4. ,, பத்மாதேவியும்
5. ,, இளையதம்பி மகள் பராசததி

—எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் 1851-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்க் காணு மாதன விடாப்பில் நன்கு விபரிக்கப்படு மாதனங்கள் 1960-ம் ஆண்டு மார்கழி மாதம் 17-ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அவ்வக்காணிகட்குள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 1160/ம் 7-9-59 தொடக்கம் 2-2-60வரைக்கும் ரூபா 1105/கரும் 10வீதவட்டியும் பின் கூட்டி வரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் நூற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 337-16½. மூன்றுற்றுமுப்பத்தேழு சதம் பதினுறரையும்.

ஆதன விடாப்பு

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சரசாலையிறை கூத்தான் வயல் நெ. பர. 25. எல்லை கிழக்கு: மாரியம்மன்கோவி லாதனம், வடக்கு: சோமுஐயர் சுந்தரஐயருக்குரியவாதனம், மேற்கு: சரவணமுத்து கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்கு முரிய வாதனம், தெற்கு: காங்கேசு பெண் சின்னப்பிள்ளைக்குரிய வாதனம். இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளனைத்தும்.

(2) ஷெ சரசாலையிறை மாத்தளாய் வயல் நெ. பர, 25, இருபத்தைந்துக்கு எல்லை கிழக்கு: நடைவரம்பும் முடிக்குரிய நிலமும், வடக்கு: சரவணமுத்து இளையதம்பிக்குரிய வாதனம், மேற்கு: சரசாலை வீரமாகாளியம்மன் கோவிலுக்குரிய வாதனம், தெற்கு: சரவணமுத்து இளையதம்பிகரும் மறுபேருக்கு முரிய வாதனம். இதடங்கலிற் சொரியலாய் எட்டில் ஏழுபங்கும் (7/8)

மு, நா. மார்க்கண்டு,
கொம்மிசனர்,
சாவகச்சேரி,
7-11-1960.
M, 139, 4-11-60.


---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 4-11-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org